## இஸ்ரேலில் உற்பத்தித் துறை தொழில்களுக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள்.

## (ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்வரும் தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர் 25 முதல் 50 வயதுக்குட்பட்ட ஆணாக இருத்தல் வேண்டும்.
- செல்லுப்படியாகும் கடவுச்சீட்டை கொண்ட இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்.
- உற்பத்தித் துறையில் குறைந்தது 3 வருட அனுபவம் கொண்டிருக்க வேண்டும். (ஆடைகள், மின்னணுவியல், உலோகங்கள், இரசாயனங்கள், உணவு, மரம் மற்றும் காகிதம், பிளாஸ்டிக், இறப்பர் போன்ற உற்பத்தி தொழிற்சாலைகள்) ஒரு வருடத்திற்கு 15 புள்ளிகள் வழங்கப்படும்).
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் (10 புள்ளிகள் வழங்கப்படும்).
- துறை சார்ந்த தொழில்முறைத் தகுதிகளைப் பெற்றிருத்தல்.(சான்றிதழ்கள் சரிபார்ப்பதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்). (15 புள்ளிகள் வழங்கப்படும்).
- தேர்ச்சி பெற குறைந்தப்பட்சம் 70 புள்ளிகள் பெற வேண்டும்.
- இரண்டாம் நிலை ஆங்கில மொழி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மேலும் செயல் திட்டங்களை ஆங்கிலத்தில் பரிமாறவும், படிக்கவும், புரிந்துக் கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும்.வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது அதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனத்தால் நடத்தப்படும் ஆங்கில மொழிப் பாடத்திட்டத்தில் 60 மணிநேரம் அல்லது அதற்கு மேல் ஆங்கிலம் பயின்று பெற்ற தேரிச்சிச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- 10 ஆம் வகுப்பு வரை பாடசாலை கல்வி பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் இதற்கு முன்னர் இஸ்ரேலில் பணிபுரிந்திருக்கக் கூடாது.
- விண்ணப்பதாரரின் வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் உடன்பிறப்புகள் தற்போது இஸ்ரேலில் பணிபுரியவோ வசிக்கவோ கூடாது.
- நல்ல உடல் நலத்துடன் இருக்க வேண்டும் மற்றும் உணவு, துப்பரவுப் பொருட்களால் ஒவ்வாமை இல்லாதவராக இருக்க வேண்டும். மேலும் நாள்பட்ட நோய்கள், பிற நோய்கள், காசநோய், மஞ்சல் காமாலை, சிபிலிஸ், கொனோரியா, எய்ட்ஸ் போன்றவற்றிலிருந்தும் விடுப்பட்டவராக இருக்க வேண்டும்.
- இலங்கையில் குற்றமற்ற பொலிஸ் அறிக்கை பதிவு பெறும் தகைமை மற்றும் விண்ணப்பதாரர் ஆறு மாதங்களுக்கும் மேலாக வேறொரு நாட்டில் பணிபுரிந்திருந்தால், அவர் அந்த நாட்டிலிருந்தும் ஒரு பொலிஸ் அறிக்கை பெற முடியுமானதாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு போதைப்பொருள் பாவணை தொடர்பில் ஏதும் தொடர்பு இருக்கக் கூடாது.
- இஸ்ரேலிய PIBA நிறுவனம் காலத்துக்கு காலம் நிர்ணயித்த மற்ற அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.